முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.A.C.O.P. No. 185/2022

2026–ம் வருடம் பிப்ரவரி மாதம் 02–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: திரு.வடிவேல் (ம.சா.1) தொழில்:

த/பெ: இனம்:

கிராமம்: வயது:

மாவட்டம்: நாள்: 02–02–2026

அனுமதிபேரில் முதல் விசாரணை தொடர்ச்சி :

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

| வ. எண். | தேதி | ஆவணம் | ஆவணத் தன்மை | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|
| 1 | --- | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.10 |

மனுப்படி உத்தரவாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் வாகனத்தை நடுரோட்டில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தார் என்றால் திசை தெரியாது, ஆனால் பழனி முதல் கணக்கன்பட்டி சென்று கொண்டிருந்தார். அப்போது நான் அர்ச்சுனன் தெருவிலிருந்து மெயின்ரோட்டிற்கு வந்து கொண்டிருந்தேன் என்றால் இல்லை, ரோட்டின் மேல்பகுதியில் நின்று கொண்டிருந்தேன். நான் சொல்வது தவறு என்றும், நான் மெயின்ரோட்டிற்கு வந்து கொண்டிருக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அர்ச்சுனன் தெருவிலிருந்து மெயின் ரோட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது தான் விபத்து ஏற்பட்டது என்றும், நான் நிதானமாக வராததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லாமல் அதிவேகமாக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கும், அவருக்கும் பாதிப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாககனத்தினை ஓட்டி வந்து 1ம் எதிர்மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன்

என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மெதுவாக இடது ஓரமாக வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் யாரும் அங்கு இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது உண்மைக்கு மாறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படாததால் அவர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. எனவே 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.